<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி</u>

**<u>O.S.No. 130/2023</u>**

21.04.2026 வாசா.1 திரு. சசிகுமார்

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. எனது தாத்தாவின் அப்பா சுப்பையா மற்றும் பிரதிவாதிகளின் குடும்பத்தினர் பங்காளிகள் என்றால் சரிதான். 2–ம் தபசில் சொத்திற்கு கிழக்கு பக்கம் சர்வே எண். 278/7C என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்ணில் தான் பிரதிவாதி வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்ணில் மேற்படி வீட்டிற்கு பின்புறம் வாதி அவரது மகனுக்கு வானம் தோண்டி வீடு கட்ட ஏற்பாடு செய்து வருகிறார் என்றால் சரிதான்.
2. 1–ம் தபசில் சொத்து, மேற்படி சர்வே எண். 278/7C க்கு தென்புறம் உள்ளது என்றால் சரிதான். 1–ம் தபசில் சொத்தில் பங்காளி என்ற முறையில் பிரதிவாதிக்கு பங்கு உள்ளது என்றால் இல்லை. பிரதிவாதி 2–ம் தபசில் சொத்தை சுற்றி கல் ஊன்றி கம்பி வேலி அமைத்ததால் பிரச்சனை என்றால் சரிதான். 2–ம் தபசில் சொத்து பிரதிவாதி வீட்டிற்கு மேற்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். 2–ம் தபசில் சொத்திற்கும் மேற்கு பக்கம் என் வீடு என்றால் சங்கர் வீடு உள்ளது அதன் அடுத்து மேல்புறம் என் வீடு உள்ளது.
3. என் வீட்டில் இருந்து வடபுறம் பஞ்சாயத்து போடு தெருவிற்கு செல்வதற்கு ஒரு கோடி உள்ளது என்றால் சரிதான். பஞ்சாயத்துபோது தெரு என்பது 2–ம் தபசில் சொத்திற்கு வடபுறம் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய வீடு 1–ம் தபசில் சொத்தை ஒட்டி உள்ளது என்றால் சரியல்ல. தள்ளி உள்ளது. 2–ம் தபசில் சொத்திற்கும், பிரதிவாதி வீட்டிற்கும் கீழ்புறம் குமார் வீட்டில் இருந்து வடபுறம் பஞ்சாயத்து போடுற்கு செல்வதற்கு கோடி உள்ளது என்றால் சரிதான். குமார் 1–ம் தபசில் சொத்தில் வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். பழைய வீட்டை இடித்து

புது வீடு கட்டிவருகிறார். அவரும் எனது பங்காளி தான் அவரது தந்தை இந்த வழக்கில் வாதியாகவும் சேர்த்து உள்ளளேன்.

4. 2-ம் தபசில் சொத்தின் பட்டாவை பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. பிரதிவாதி தாக்கல் செய்த எதிர் வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை தாவா சொத்து அவருக்கு பாத்தியப்பட்ட என உரிமை கொண்டாடி வருகிறார். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என உரிமை கொண்டாடி வருகிறார் என்றால் சரிதான்.
5. நான் பிரதிவாதி தாவா 2-ம் தபசில் சொத்தை சுற்றி வேலி அமைத்துள்ளார் என்ற விவரத்தை பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி பட்டா எண்.202 ஐ பற்றி சொல்லியுள்ளது தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். மேற்படி பட்டா உள்ளதை பற்றி கிராம நிர்வாக அலுவகரிடமோ அல்லது வட்டாட்சியரிடமோ சென்று விசாரித்தேனா என்றால் இல்லை. எனது பங்காளிடம் மேற்படி பட்டாவை பற்றி சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.
6. சர்வே எண். 278/7C மற்றும் 2-ம் தபசில் சொத்திற்கும் பிரதிவாதியின் தந்தை செல்லையா பெயரில் பட்டா எண். 202 வழங்கப்பட்டு அவர்களின் தனித்து அனுபவத்தில் மேற்படி இடங்கள் உள்ளது என்பதை தெரிந்து இருந்தே இந்த வழக்கை உண்மையை மறைத்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

MARIMUTHU R MUNIYASAMY

Deposition uploaded on 21.04.2026
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.04.21 15:35:48 +0530

Principal District Munsif,
Tirunelveli.